வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்
ந.க.எண்.1290/ஆ2/2024 நாள்: 20.08.2025

பொருள்: பள்ளிக் கல்வி– வேலூர் மாவட்டம்– ஆசிரியர் நலன்– 50 வயதினை கடந்த ஆசிரியர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை முழு உடல் பரிசோதனை திட்டம் செயல்படுத்துதல்– ஆசிரியர்களின் உடல்நல பரிசோதனைக்கான கால அட்டவணையின் படி குறிப்பிட்டுள்ள நாட்களில் உடற்பரிசோதனை செய்துக் கொள்ள தெரிவித்தல் –சார்பு.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.41 பள்ளிக்கல்வித்துறை (ப.க.5(1)) துறை நாள்: 13.02.2024.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.17510/எம்1/இ3/2024 நாள்: .02.2025, 26.03.2025, 25.04.2025.
3. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.1290/ஆ2/2024 நாள்: 02.06.2025, 11.07.2025, 04.08.2025.
4. அடுக்கம்பாறை அரசு மருத்துவமனை கல்லூரி முதல்வரின் கடித ந.க.எண்.7637/க6/2025 நாள்: .07.2025, 19.08.2025

பார்வை(1)இல் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 01.03.2023 அன்று 50 வயதினை கடந்த அரசு பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை முழு உடல் பரிசோதனை செய்வதற்கான திட்டத்தின் கீழ் பயன்பெற தெரிவு செய்யப்பட்டுள்ள வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு தொடக்க/நடுநிலை/உயர்/மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 150 ஆசிரியர்களுக்கு (Package–1 Gold Scheme) உடற்பரிசோதனை மேற்கொள்ளவதற்கான கால அட்டவணை பார்வை(4)–இல் காணும் 19.08.2025 நாளிட்ட கடிதம் மூலம் இவ்வலுவலகம் பெறப்பட்டது.

எனவே, இத்திட்டத்தின் கீழ் தெரிவுச் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களை இணைப்பில் உள்ள கால அட்டவணையில் அவர்களின் பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில், வெறும் வயிற்றில் (Empty Stomach) அடுக்கம்பாறை, அரசு மருத்துவமனை மற்றும் கல்லூரிக்கு தவறாமல் சென்று உடற்பரிசோதனைகளை மேற்கொள்ளும்படி தெரிவிக்குமாறு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், இப்பட்டியலில் இடம் பெற்றுள்ள தலைமையாசிரியர்கள்/ஆசிரியர்கள் ஓய்வு பெற்றிருப்பின் அவர்களுக்கு தகவல் தெரிவித்து பரிசோசதனை மேற்கொள்ளும்படி தெரிவிக்குமாறு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு: கால அட்டவணை.

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ)
வேலூர்.

பெறுநர்
சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்
வேலூர்.

நகல்
1. பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணிகள்) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலை/ தொடக்கக் கல்வி)
மாவட்டக் கல்வி அலுவலகம், வேலூர்.
(தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது)
3. சார்ந்த ஆசிரியர்கள் (சம்மந்தப்பட்ட தலைமையாசிரியர் மூலமாக).